**நவம்பர் – 15**

# TNPSC துளிகள்

- கோவை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலை தொகுதியானது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- சர்வதேச பண்டைய கலை விழா மற்றும் கருத்தரங்கம் ஆனது புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியானது பெண் தொழில்முனைவோருக்கு கடன், திறன் மேம்பாடு, ஆலோசனை சேவைகள், வலையமைப்பு வாய்ப்புகளை வழங்கச் செய்வதற்காக பெங்களூரு, சென்னை, விசாகப்பட்டினம் மற்றும் ஜெய்ப்பூரில் ஐந்து நாரி சக்தி கிளைகளைத் தொடங்கியுள்ளது.
- உலக நகர்ப்புற மன்றத்தின் (WUF12) 12வது அமர்வு ஆனது எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில் நடைபெற்றது.
- சுதந்திரப் போராட்ட வீரரும் மேவார் பிரஜா மண்டல் போராளியுமான ராஜஸ்தானைச் சேர்ந்த மதன் மோகன் சோம்தியா, சமீபத்தில் காலமானார்.
- பத்ம விபூஷன் மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது பெற்ற புகழ்பெற்ற சாரங்கி இசைக் கலைஞர் மகாராஷ்டிராவினைச் சேர்ந்த பண்டிட் ராம் நாராயண் சமீபத்தில் காலமானார்.
- இந்தியாவின் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பினாகா பல்லடுக்கு ஏவுகணை ஏவல் அமைப்பினை வாங்கிய முதல் நாடாக ஆர்மீனியா மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பை ஆதரிக்கும் முன்னெடுப்புகள்




- தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களின் சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையிலான பல முன்னெடுப்புகளை தமிழக அரசு தொடங்கியுள்ளது.

- முதல் முன்னெடுப்பு பெரியார் சமூக நீதி துணிகர முதலீட்டு ஆய்வகம் ஆகும்.
- இது சமூக நிறுவனங்கள், பல்வேறு பருவநிலை நடவடிக்கை முன்னெடுப்புகள் மற்றும் பட்டியலிடப் பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் புத்தாக்க தொழில் நிறுவனர்களுக்கான பிரத்தியேக ஆலோசனை, திறன் பயிற்சி மற்றும் ஊக்கமளிப்புத் திட்டங்கள் ஆகியவற்றினை முதலீட்டிற்கு முந்தைய மற்றும் முதலீட்டிற்குப் பிந்தைய நிலைகளில் வழங்கும்.
- மற்றொன்று தொழில் நயம் வடிவமைப்பு மையம் ஆகும்.
- இது இணைய வழி வணிகத் தளங்களில் வெற்றிகரமான இடம் பெற்றிருப்பதன் மூலம் மாநிலத்தில் நேரடி நுகர்வோர் சேவை (D2C) வழங்கும் புத்தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு அரசானது, சமீபத்தில் துபாயில் உலகளாவிய புத்தொழில் ஒருங்கிணைப்பு மையத்தினை நிறுவியது.
- சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவிலும் இது போன்ற மையங்கள் விரைவில் நிறுவப் படும்.
- சமீபத்தில் துபாயில் நடைபெற்ற புகழ்பெற்ற GITEX நிகழ்வில் பங்கேற்க, தமிழகத்தைச் சேர்ந்த 19 புத்தொழில் நிறுவனங்களுக்கும் அரசு நிதியுதவி அளித்தது.

## மாணவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்




- பாதிக்கப்பட்ட பள்ளிகளின் நிர்வாகத்தை மேற்பார்வையிடவும், அதன் கண்காணிப்பு மற்றும் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தவும் வேண்டி சிறப்பு அதிகாரிகளை தமிழக அரசு நியமித்துள்ளது.
- இந்த மாநிலம் முழுவதிலும் ஒவ்வொரு பள்ளியிலும் புதிதான மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு (SSAC) அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
- மாணவர் நலன் தொடர்பான பிரச்சினைகள் அல்லது புகார்களைத் தீர்ப்பதற்கு SSAC குழுக்கள் மாதந்தோறும் கூடும்.
- பள்ளிக் கல்வித் துறையானது கட்டணமில்லா உதவி எண்களை - 14417 மற்றும் 1098 – பாடப் புத்தகங்களின் பின் அட்டைகளில் பதிப்பது என்பது தற்போது மேற்கொள்ளப் பட்ட பல்வேறு முக்கிய முயற்சிகளில் ஒன்றாகும்.
- இந்த எண்கள் ஆனது மாணவர்கள் தங்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் அல்லது பிற பாதுகாப்பற்றச் செயல்களின் சம்பவங்களைப் பெயர் தெரிவிக்காமல்

புகாரளிக்க உதவும்.

- மாணவர்கள் தங்களின் குறைகளை வெகு இரகசியமாகச் சமர்ப்பிக்கும் வகையில் - மாணவர் மனசு என்று பெயரிடப்பட்ட சில புகார் பெட்டிகளை நிறுவவும் பள்ளிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசிய MSME தொழில்துறை தொகுதி விழிப்புணர்வுத் திட்டம்


- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை நிறுவனங்களுக்கு (MSME) நிதி அணுகலை மேம்படுத்துவதற்காக ஒரு தேசிய திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- ஒரு தொழில்துறை தொகுதி என்பது நன்கு அடையாளம் காணக் கூடிய மற்றும், தற்போது நடைமுறைக்கு ஏற்ற, அருகமைந்த பகுதிகளில் மற்றும் ஒத்தத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் குழுவாகும்.
- இது தொழில்நுட்பம், திறன் மற்றும் தர மேம்பாடு, சந்தை அணுகல், மூலதனத்திற்கான அணுகல் போன்ற சில பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் MSE நிறுவனங்களின் நிலைத் தன்மை மற்றும் வளர்ச்சியை ஆதரிக்கும்.





## புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ச்சி மற்றும் முதலீடு 2024

- இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் ஆனது ஓராண்டில் 13.5 சதவீதம் அல்லது 24.2 ஜிகாவாட் அதிகரித்து 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 203.18 ஜிகா வாட்டை எட்டியது.
- இது 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 178.98 GW ஆக இருந்தது.
- அணுசக்தி உட்பட, மொத்தப் புதைபடிவம் சாரா எரிபொருள் திறன் ஆனது 2023 ஆம் ஆண்டில் 186.46 GW ஆகவும் இருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் அது 211.36 GW ஆக உயர்ந்தது.
- சூரிய சக்தி உற்பத்தித் துறையானது 20.1 ஜிகாவாட் (27.9 சதவீதம்) என்ற அளவில் மிக குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கண்டது.

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சுமார் 72.02 ஜிகாவாட்டாக இருந்த இது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 92.12 ஜிகாவாட்டாக உயரும்.
- செயல்படுத்தப்பட்ட மற்றும் ஏலம் விடப்பட்ட பல்வேறு உற்பத்தித் திட்டங்கள் உட்பட ஒருங்கிணைந்த மொத்த சூரிய சக்தி உற்பத்தித் திறன் தற்போது 250.57 ஜிகாவாட்டாக உள்ளது.
- இது கடந்த ஆண்டு பதிவான 166.49 ஜிகாவாட் அளவிலிருந்து பதிவான குறிப்பிடத்தக்க உயர்வாகும்.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 44.29 ஜிகாவாட்டாக இருந்த காற்றாலை ஆற்றலின் நிறுவப்பட்ட திறன் ஆனது 2024 ஆம் ஆண்டில் 7.8 சதவீதம் அதிகரித்து 47.72 ஜிகா வாட்டாக உயர்ந்தது.




## WIPO காப்புரிமைத் தாக்கல் 2023 – இந்தியா




- 2018 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவின் காப்புரிமைகள் மற்றும் தொழில்துறை தாக்கல்கள் இரட்டிப்பாகச் செய்யும் அதே வேளையில் வர்த்தக முத்திரைகள் 60% அளவிற்கு அதிகரித்தன.

- இந்தியாவின் காப்புரிமைத் தாக்கல்கள் தற்போது சுமார் 15.7% அளவிற்கு அதிகரித்து 64,480 காப்புரிமைத் தாக்கல்களுடன் உலகளவில் 6வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் அறிவுசார் சொத்துரிமை அலுவலகம் ஆனது, 2023 ஆம் ஆண்டில் சுமார் 3.2 மில்லியன் பதிவுகளுடன் வர்த்தக முத்திரைப் பதிவுகளில் உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- கடந்தப் பத்தாண்டுகளில் நாட்டின் காப்புரிமை-GDP விகிதமானது 144 என்ற அளவில் இருந்து 381 ஆக உயர்ந்துள்ளது.
- வர்த்தக முத்திரைகளைத் தாக்கல் செய்வதில் 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டவரின் 90% பதிவுகளுடன் வர்த்தக முத்திரைத் தாக்கல் 6.1% அதிகரித்து இந்தியா உலகளவில் 4வது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 36.4% அதிகரிப்புடன் தொழில்துறை வடிவமைப்புத் தாக்கல்களில் இந்தியா உலகளவில் 10வது இடத்திற்கு முன்னேறியது.

# சர்வதேசச் செய்திகள்

## ரஷ்யாவின் பான்ட்சிர் அமைப்பு




- மேம்படுத்தப் பட்ட பான்ட்சிர் என்ற வான்வழிப் பாதுகாப்பு எறிகணை-துப்பாக்கி அமைப்பின் பல்வேறு மாறுபாடுகளை உற்பத்தி செய்வதற்கான ஒத்துழைப்பை மேற் கொள்வதற்காக ரஷ்யாவுடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இது பான்ட்சிர் மாறுபாடுகளின் உற்பத்தி, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் கூட்டு உருவாக்கத்திற்கான புதிய வழிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பான்ட்சிர் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பானது வான்வழி அச்சுறுத்தல்களிலிருந்து ராணுவ நிறுவல்கள் மற்றும் மிகவும் முக்கியமான உள்கட்டமைப்பைப் பாதுகாக்க வடிவமைக்கப் பட்டப் பல்துறை மற்றும் எளிதில் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லக் கூடிய தளமாகும்.
- இதில் விமானம், ஆளில்லாத விமானங்கள் மற்றும் துல்லியமாக வழி காட்டப் படும் ஏவுகணைகள் ஆகியவை அடங்கும்.
- இந்த அமைப்பு ஆனது குறுகிய தூரம் முதல் நடுத்தர தூரம் வரையிலான வரம்புடைய

தரையிலிருந்து வான்வழி ரீதியில் ஏவக் கூடிய சில எறிகணைகளை 30 மில்லி மீட்டர் இரட்டை தானியங்கி பீரங்கிகளைக் கொண்டுள்ளது.

- 36 கிலோமீட்டர் தொலைவிலும், 15 கிலோமீட்டர் உயரத்திலும் உள்ள சில இலக்குகளை பான்ட்சிர் கண்டறிந்து எதிர் கொள்ளக் கூடிய வகையில் உள்ளது.
- பான்ட்சிர் அமைப்பானது பல்வேறு நிலப்பரப்புகளுக்கு ஏற்ற தகவமைப்பு மற்றும் பல வான்வழி அச்சுறுத்தல்களை ஒரே நேரத்தில் எதிர்கொள்ளும் திறன் கொண்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## புதிய சைனோபாக்டீரியா மாற்றுரு – சோங்கஸ்




- சோங்கஸ் எனப்படும் சைனோபாக்டீரியாவின் தனித்துவமான வகையை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இத்தாலி நாட்டின் வல்கானோ அருகே உள்ள எரிமலைக் கடல் துவாரங்களில் இந்த மாற்றுரு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கார்பன் டை ஆக்சைடு நிறைந்த நீரில் சோங்கஸ் விரைவாக வளர்ச்சியடைகிறது.
- இது இயற்கையாகவே நீரில் மூழ்கும் திறனைக் கொண்டுள்ளது என்பதோடு இது கார்பன் பிடிப்புக்கு உதவுகிறது.

## 'உயிரிப் படலத் தடைகளை' சிதைத்தல்

- இந்திய அறிவியல் கல்விக் கழகத்தின் (IISc) அறிவியலாளர்கள் குழுவானது, மருந்துகள் உடலில் நுழைவதற்கு உதவும் 'உயிரிப் படலத் தடைகளை' சிதைப்பதற்கு ஒரு வழியை உருவாக்கியுள்ளது.
- நோயை உண்டாக்கும் பாக்டீரியாக்களில் பெரும்பாலானவை 'உயிரிப் படலங்கள்' எனப்படும் அச்சு போன்ற அடுக்குகளைத் தங்களைச் சுற்றி வெளியிடுகின்றன.
- இந்த 'உயிரிப் படலங்கள் ஆனது தடிமனானத் தடைகளாக செயல்பட்டு, மருந்துகளின் நுழைவைக் கட்டுப்படுத்தி, மேலும் பாக்டீரியாக்களை நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு எதிர்ப்புத் திறனை உருவாக்க உதவுகின்றன.
- இந்த 'உயிரிப் படலத்' தடையைச் சிதைப்பதற்கு என்று, அக்குழு பசுவின் செரிமான மண்டலத்தில் உள்ள ஒரு நொதியைப் பயன்படுத்தியது.

- செல்லுலோஸ் மற்றும் ஹெமிசெல்லுலோஸ் போன்ற பல்வேறு வகையான சிக்கலான பாலிசாக்கரைடுகளை ஜீரணிக்கும் சில நுண்ணுயிர் நொதிகள் பல்வேறு கால்நடை உயிரினங்களின் குடல்களில் காணப்படுகின்றன.
- கிளைகோசைட் ஹைட்ரோலேஸ்கள் (GH)-B2 என்பது பல்வேறு ஆய்வக நிலைகளில் இந்த உயிரிப் படலங்களை வெற்றிகரமாகச் சிதைப்பதை அவர்கள் கண்டறிந்தனர்.




## உயிரி முறையில் உருவாக்கப்பட்ட நுரை



- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், ஒரு புதுமையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், உயிரி முறையில் உருவாக்கப்பட்ட ஒரு நுரையை உருவாக்கியுள்ளனர்.
- இந்த நுரையானது உணவிற்கு என்று பயன்படுத்தப்படாத சில எண்ணெய்கள் மற்றும்

தேயிலைகளிலிருந்துப் பெறப்பட்ட கடினப்படுத்திக் காரணிகள் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப் படுகின்ற உயிரி சார்ந்த எபோக்சி வகை பிசின்களிலிருந்து தயாரிக்கப் படுகிறது.

❖ இது புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத பொருட்களைச் சார்ந்து இருக்கும் நிலையை வெகுவாக குறைப்பதோடு, நுரையின் சிறப்பான அழுத்த வலிமையைப் பேணுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## UNFCCC COP 29




❖ 2024 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்ற மாநாடு (COP29) ஆனது அஜர்பைஜானின் பாகு நகரில் தொடங்கியது.

❖ புவி மேலும் வெப்பமடைவதைத் தடுப்பதற்காகப் பகிரப்பட்ட திட்டத்தை உருவாக்க உலக நாடுகளை ஒன்றிணைப்பதே COP29 மாநாட்டின் முதன்மையான குறிக்கோள் ஆகும்.

❖ இது பருவநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளைச் சமாளிக்க வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவும் வகையில் பருவநிலை நிதியை அதிகரிப்பதின் மீது முக்கியக் கவனம் செலுத்தும்.

❖ பருவநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு உடன்படிக்கை (UNFCCC) எனப்படும் ஒரு சர்வதேச ஒப்பந்தம் ஆனது 1992 ஆம் ஆண்டில் கையெழுத்து ஆனது.

❖ 1997 ஆம் ஆண்டில் கியோட்டோ நகரில் (ஜப்பான்) நடைபெற்ற மூன்றாவது பங்குதாரர் மாநாட்டில் (COP3) பங்குதாரர் நாடுகள் கியோட்டோ நெறிமுறையை ஏற்று கொண்டன.


❖ பாரீஸ் நகரில் நடைபெற்ற COP21 மாநாட்டில் 196 பங்குதாரர் நாடுகள் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பாரீஸ் உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டன என்ற வகையில் இது சட்டப் பூர்வமாக பிணைக்கப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.

❖ 2021 ஆம் ஆண்டில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற COP26 என்ற மாநாட்டின் போது கிளாஸ்கோ உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- துபாயில் நடைபெற்ற COP28 மாநாட்டில், இழப்பு மற்றும் சேத நிதி அதிகாரப்பூர்வமாக அறிமுகப் படுத்தப் பட்டது.

## தீ தாங்குந்திறன் கொண்ட தாவரம்

- இந்தியாவின் மேற்கு தொடர்ச்சி மலையின் வடக்குப் பகுதியில் புதிய வகையிலான தீப்பற்றுதலுக்கான தாங்குந்திறன் கொண்ட ஒரு தாவர இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த இனத்திற்கு 'டிக்லிப்டெரா பாலிமார்பா' என்று பெயரிட்டுள்ளனர்.
- இந்தப் புதிய இனங்களானது புல்வெளிப் பகுதிகளில் ஏற்படும் தீயின் மூலம் தூண்டப் பட்ட பூக்கள் வெடிப்பு அம்சத்தினைக் கொண்டுள்ளன.
- இந்த இனம் ஆனது அதன் தீ-எதிர்ப்புத் திறன், வறண்டச் சூழலுக்கு ஏற்ற தகவமைப்பு கொண்ட தன்மை மற்றும் அதன் மிக தனித்துவமான இரட்டை-பூத்தல் செயல்முறை ஆகியவற்றால் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக அறிவுசார் சொத்துக் குறிகாட்டிகள் (WIPI) 2024

- உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பானது (WIPO) 2024 ஆம் ஆண்டிற்கான WIPI அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகளவில், சுமார் 35 லட்சத்திற்கும் அதிகமான காப்புரிமைகள் தாக்கல் செய்யப் பட்டுள்ள நிலையில் 1.64 மில்லியன் எண்ணிக்கையுடன் சீனா முன்னணியில் உள்ளது.

- ❖ இதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, ஜெர்மனி ஆகிய நாடுகள் உள்ளன.
- ❖ காப்புரிமைத் தாக்கல் செயல்பாட்டில் நிலையான உயர்வுடன் ஜெர்மனியை முந்தி இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் உலகளாவியக் காப்புரிமைத் தாக்கல் 15.7% அதிகரித்துள்ளது என்ற நிலையில் இது தொடர்ந்து 4வது ஆண்டாக நேர்மறை வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் ஆசியா உலகளாவியக் காப்புரிமைத் தாக்கல்களில் 68.7%, வர்த்தக முத்திரைத் தாக்கல்களில் 66.7% மற்றும் தொழில்துறை வடிவமைப்புத் தாக்கல்களில் 69% பங்கினைக் கொண்டுள்ளது.
- ❖ IPR காப்புரிமைகள், பதிப்புரிமை, வர்த்தக முத்திரைகள், வடிவமைப்புகள், புவிசார் குறியீடுகள் மற்றும் வர்த்தக இரகசியங்களை உள்ளடக்கியது.

**IP filing activity by office**

| Patents | 2022 | 2023 | Growth rate (%) | Share of world total (%) |
|---|---|---|---|---|
| **Applications worldwide** | **3,457,800** | **3,552,100** | **2.7** | **100.0** |
| China | 1,619,268 | 1,677,701 | 3.6 | 47.2 |
| US | 594,340 | 598,085 | 0.6 | 16.8 |
| Japan | 289,530 | 300,133 | 3.7 | 8.4 |
| **Utility models** | | | | |
| **Applications worldwide** | **3,011,620** | **3,127,960** | **3.9** | **100.0** |
| China | 2,950,653 | 3,063,928 | 3.8 | 98.0 |
| Russian Federation | 8,521 | 9,742 | 14.3 | 0.3 |
| Germany | 9,469 | 9,704 | 2.5 | 0.3 |

## உலகளாவிய சிறந்த மதிப்புள்ள நகரங்களின் தரவரிசை 2024




- ❖ முதல் 100 "சிறந்த மதிப்புள்ள நகரங்கள்" பட்டியலில் இலண்டன் நகரம் தொடர்ந்து

இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.

- அதைத் தொடர்ந்து இதில் நியூயார்க், பாரீசு, டோக்கியோ, துபாய், சிங்கப்பூர், லாஸ் ஏஞ்சல்ஸ், சிட்னி, சான் பிரான்சிஸ்கோ மற்றும் ஆம்ஸ்டர்டாம் ஆகிய பல நகரங்கள் இடம் பெற்றுள்ளன.
- இது 20 நாடுகளில் 15,000 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மதிப்பிடப் பட்டது.
- மேற்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா பிராந்தியத்தில் துபாய் மிகவும் உயர்ந்தத் தர வரிசையினைப் பெற்ற நகரமாக உருவெடுத்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## கடல் வழி விமானச் சேவை – கேரளா





- கேரள மாநில அரசானது விமான நிலையங்களுடன் பல்வேறு இடங்களை இணைக்கச் செய்வதற்காக கடல் வழி விமானசஜ் சேவையை தொடங்கியுள்ளது.
- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முக்கிய நீர்நிலைகளைச் சுற்றி நீர்நிலை விமான நிலையங்கள் அமைக்கப்படலாம்.
- கடல் வழி விமானச் சேவையானது, பிராந்திய விமானச் சேவை இணைப்பு (RCS)-UDAN திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

- இது கேரளாவின் நான்கு விமான நிலையங்கள் மற்றும் உப்பங்கழிகள் வழியாக ஒரு மானியக் கட்டணத்துடன் விமானச் சேவை இணைப்பை நன்கு மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் ஒரு சோதனை ஓட்டம் கொச்சி ஏரியில் உள்ள போல்காட்டி நீர் நிலையத்தில் இருந்து மூணாறில் உள்ள மாட்டுப்பட்டி அணைக்கு மேற்கொள்ளப் பட்டது.

# முக்கிய தினங்கள்

## உலக நிமோனியா தினம் - நவம்பர் 12


- இது உயிருக்கு ஆபத்தான ஆனால் தடுக்கக் கூடிய மற்றும் சிகிச்சையளிக்கக் கூடிய சுவாசம் சார்ந்த நோயான நிமோனியா பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது குழந்தைப் பருவ நிமோனியாவுக்கு எதிரான உலகளாவியக் கூட்டணியால் 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Every Breath Counts: Stop Pneumonia in Its Track" என்பதாகும்.
- 2019 ஆம் ஆண்டில், உலகம் முழுவதும் நிமோனியாவால் 25 லட்சம் பேர் உயிரிழந்து உள்ளதோடு ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் ஏழு லட்சம் குழந்தைகளும் இதனால் உயிர் இழந்துள்ளனர்.




## பொது சேவை ஒளிபரப்பு தினம் - நவம்பர் 12

- நாடு முழுவதும் கலாச்சார பன்முகத்தன்மையை தெரிவிப்பதிலும், பயிற்றுவிப்பதிலும், ஊக்குவிப்பதிலும் ஆகாஷ்வானியின் முக்கிய பங்கை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- 1947 ஆம் ஆண்டு டெல்லியில் உள்ள ஆகாஷ்வானி நிலையத்திற்கு M.K. காந்தி அவர்கள் மேற்கொண்ட முதல் மற்றும் ஒரே வருகையின் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்தியப் பிரிவினைக்குப் பிறகு ஹரியானாவில் உள்ள குருக்ஷேத்திரத்தில் தற்காலிகமாக குடியேறிய புலம் பெயர்ந்த மக்களிடம் அவர் உரையாற்றினார்.

- இந்தத் தினமானது, 2001 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக பொது சேவை ஒளிபரப்பு தினமாக அறிவிக்கப்பட்டது.




# இதரச் செய்திகள்

## முழங்கால் மறுவாழ்வு சிகிச்சை

- ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, தொடர்ச்சியான உடல் இயக்கம் சாரா (CPM) சிகிச்சையை மிகவும் நன்கு அணுகக் கூடியதாகவும் மலிவு விலையாகவும் மாற்றுவதற்கான ஒரு புதுமையானத் தீர்வை வெளியிட்டுள்ளது.
- முழங்கால் மறுவாழ்வு சிகிச்சைக்காக என்று இந்தக் குழுவானது முற்றிலும் இயந்திர அடிப்படையிலான உடலியக்கம் சாராத வகையிலான ஒரு இயந்திரத்தை உருவாக்கி யுள்ளது.
- வழக்கமான இயக்கி பொருத்தப்பட்ட CPM இயந்திரங்கள் விலை உயர்ந்தவை மற்றும் மின்சாரத்தைச் சார்ந்தவையாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★